1984 மார்ச் 29]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொன்னேன். எனக்குத் தெரிந்தவரையில் இந்தியாவில் தமிழக அரசுதான் முதன்முதலாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறது. வேறு மாநிலத்தில், நான் விசாரித்த வரையில் இல்லை. எங்காவது இருக்குமா என்பது எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த வரையில் தமிழகத்திலேதான் கொண்டு வருகிறோம். ஈ. எஸ். ஐ. திட்டத்தை விரிவுபடுத்துவது, ஆர்கனைஸ்ட் லேபரர்களுக்குகூட விரிவாக்குவது என்பது ஏரியா ஏரியாவாகத் தான் நாம் விரிவாக்கிக் கொண்டு வருகிறோம். அதைப்போல இந்தத் தொழிலாளர்களுக்கும் விரிவாக்குவதற்கு வேண்டிய 'எனேபிளிங் மெஷர்ஸ்' அந்த அதிகாரத்தைப் பெறக்கூடிய அளவிலே இந்தச் சட்டத்திலே வகை செய்திருக்கிறோம். அதைப் பெற்ற பிறகு, எங்கெங்கே எப்போது விரிவாக்கலாம் என்பதைப் பார்த்து செயல்படுத்தப்படும். இந்தச் சட்ட முன்வடிவு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசயிருக்கிறார்கள். அப்போது நாம் இதைப்பற்றி விரிவாகப் பேசலாம்.

கோவையில் காலியாக உள்ள தொழிலாளர் நல அதிகாரிகளின் பதவிகள்.

503 —(*வினா எண் 21481) —**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் 6 மாத காலமாகத் தொழிலாளர் நல அதிகாரிகள் மூன்று பேர் இல்லாமல் வழக்குகள் தேங்கிக் கிடப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், காலியாக உள்ள இடங்களைப் பூர்த்தி செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கோவையில், 3 பதவிகள், ஆறு மாதங்களுக்கு மேலாக காலியாக இருந்தன என்பதும், தொழிற் தகராறு வழக்குகள் குவிந்து விட்டன என்பதும் அவ்வளவு சரியில்லை. இம்மூன்று பதவிகளும், 4-லிருந்து 5 மாதங்கள் வரையில் மட்டுமே அலுவலர்களது பதவி ஓய்வு மற்றும் பதவி மாற்றம் காரணமாக காலியாக இருந்தன. இப்பதவிகளை மற்ற அலுவலர்கள் முழுக்கூடுதல் பொறுப்பு வகித்து பணியாற்றி வந்தும், தொழிற் தகராறு வழக்குகள் நிலுவை கணிசமாக அதிகரிக்கவில்லை.

(ஆ) இப் பணியிடங்கள் யாவும் தற்போது நிரப்பப்பட்டு விட்டன.

[1984 மார்ச் 29

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியே, கோவையிலே 6 மாத காலமாக தொழிலாளர்கள் நல அதிகாரிகள் 3 பேர்கள் இல்லை என்பது தான். தாங்கள் சொல்லக் கூடிய பதிலில், 6 மாதங்கள் இல்லை, 5 மாதங்கள் இருந்ததாகச் சொல்வது அவ்வளவு சரியல்ல. பதவிகள் காலியாக இருந்தன என்பது உண்மை. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் 5 மாதங்களாக இல்லாத காரணத்தினால், கோவை மாவட்டத்தில் பல்வேறு தொழில் தகராறுகள் சம்பந்தமான வழக்குகள் தேங்கி யிருந்த காரணத்தாலும், பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டியதற்கு அடிப்படைக் காரணமாக இருந்துகொண்டிருக்கி றது. இப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்கு, சூப்பர் ஆனுவேஷனிலே அவர்கள் சென்றிருந்தாலும், உடனடியாக இப்படிப்பட்ட அதிகாரிகளைப் போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது முழுமையாக சரியல்ல என்று நான் சொல்லவில்லை. 6 மாதங்கள் என்று கணக்குச் சொன்னார், 4 லிருந்து 5 மாதங்கள் தான் என்று நான் சொன்னேன். காலதாமதம் ஆனது உண்மை. அது தவிர்க்கப்பட வேண்டியது உண்மை. இப்படி 4, 5 மாதங் கள் ஆகக்கூடாது, அதைத் தவிர்க்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படும். இப்போது எல்லா இடங்களிலும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல, வழக்குகள் தேங்கவில்லை; கம்மியாகி இருக்கிறது. அடிஷனல் சார்ஜ் கொடுத்து, கூடுமானவரையில் முக்கியப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், 4, 5 மாதங்கள் கூட காலியாக இல்லாமல் உடனடியாக காலியாக உள்ள இடங்களை எல்லாம் பூர்த்தி செய்வதற்கு, இனிமேல் அரசு எல்லா நடவடிக்கைகளையும், சகல முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் இருக்கக்கூடிய தொழிலாளர் நல இலாக்கா வின் டீ. சி. எல். என்று சொல்லக்கூடியவர்கள் 5 மாவட்டங் களுக்கும் ஒரு டீ. சி. எல். என்று இருப்பதன் காரணத்தால், 5 மாவட்டங்களிலும் தொழிலாளர்கள் குவிந்திருப்பதால் அப் போதைக்கப்போது வரக்கூடிய தொழில் தகராறுகளைத் தீர்க்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. மேலும் அவர்களுக்கு அடி ஷனலாக ஒர்க்மேன்ஸ் காம்பன்சேஷன் என்ற பணியும் கொடுக் கப்பட்டு வேலைப் பளு அதிகமாக இருக்கின்றது. ஆகவே அந்த 5 மாவட்டங்களுக்கு என்று இருப்பதை இரண்டு பிரிவுகளாக பிரித்து, கோவை, நீலகிரி, பெரியார் போன்ற மாவட்டங்களுக்கு

1984 மார்ச் 29]

தனியாக ஒரு டீ. சி. எல். போடப்படுமா? இந்த வழக்குகளை எல்லாம் உடனடியாகத் தீர்ப்பதற்காக அவ்வாறு தனியாக ஒரு டீ. சி. எல். போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. இருந்தாலும் சொல்கிறேன். கோவையில் ஒரு டீ. சி. எல். இருக்கிறார். சேலத்திலே ஒரு டீ. சி. எல். இருக்கின்றார். ஆகவே சிரமம் அதிகமாக இல்லை என்றுதான் தகவல் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவையில் இருக்கும்படியான தொழிலாளர் இலாக்காப் பிரிவில் ஏற்கனவே இருந்து வந்ததைவிட இப்போது வேலைப் பளு மிகவும் அதிகமாகிவிட்டது. எண்ணற்ற வழக்குகள் காலாகாலத்தில் டிஸ்போஸ் ஆகாமல் இருக்கின்றது என்பது உண்மை. அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் அங்கே வந்து இன்ஸ்பெக்ட் செய்தால் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும். மேலும் கோவை மாதிரி இருக்கக்கூடிய ஒரு மையத்தில் ஒரு அடிஷனல் லேபர் கமிஷனர் இருப்பது அவசியம். அத்தோடு குறைந்த பட்சம் 2 டீ. சி. ல். (D. C. L.) களும், 6 பேர்கள் லேபர் ஆஃபீஸர்களும் இந்த இடத்தில் இருந்தால்தான் அங்கே வேலையைச் சமாளிக்க முடியும். ஆனால் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது கோவையிலே சிலர் லீவிலே போனதன் காரணத்தால்தான் தாமதம் என்று சொன்னார்கள். அப்படி லீவிலே போனதன் காரணத்தால் மற்றவர்களுக்கு அடிஷனல் சார்ஜ் கொடுக்கப்பட்டாலும்கூட அதன் காரணத்தாலும் கேஸ்கள் தேங்கும். நான் சொன்ன மாதிரி அந்த அடிப்படையில் ஒரு அடிஷனல் கமிஷனர் நியமித்துத் தனியாக ஒரு சென்டர் வைக்கக் கூடிய முயற்சியினை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, காலதாமதம் இல்லாமல் காலி இடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்தை இந்த அரசு முழுமையாக ஏற்றுக் கொண்டு காலதாமதத்தைத் தவிர்க்கும் என்று நான் சொன்னேன். இன்னும் அதிகமாக அங்கே கன்சிலியேஷன் ஆஃபீஸர் போடவேண்டுமா என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம். எனக்குத் தெரிந்த அளவில் இப்போது இருக்கக்கூடிய அதிகாரிகள் போதும் என்பதுதான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஊரைச் சேர்ந்த நல்ல தொழிற்சங்கவாதி. அவர் சொன்ன காரணத்தால் அவருக்கு மதிப்புக் கொடுத்து, கமிஷனர் அவர்களிடத்திலே சொல்லி அங்கே அதிகமாக அதிகாரிகள் போட வேண்டிய சூழ்நிலை இருக்கின்றதா என்பதைப் பற்றி பரிசீலனை செய்யச் சொல்கிறேன்.